
# கட்டிப்போடவும்.



கட்டிப்போடவும் மனம் வரவில்லை - உன்னை,

தொட்டு அடிக்கவும் மனம் இடம் தரவில்லையே கண்ணா !

கட்டிப்போடவும்......

கட்டித்தயிரை திருடி உண்டு பின்பு,

குட்டுவெளியானதால் கண்ணா நீயும்;

திட்டியுனை நானும் அடிப்பேனென்று,

தட்டுத்தடுமாறி ஓடினாயோ கண்ணா !

கட்டிப்போடவும்......

கட்டிப்போட கயிறுடன் நானும்வந்தபின்,

கட்டுண்டேன் உன்தன் அழகில் கண்ணா;

தட்டிக்கேட்க உன்னருகில் வந்த நானும்,

தட்டுத்தடுமாறி நின்றதேன் கண்ணா !

கட்டிப்போடவும்.......